[21st July 1964

*605 *Q.*—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an over-bridge near the level-crossing at Manamadurai Junction on Madurai–Mandapam Road; and

(*b*) if so, when this work will be taken up?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழாது.

Loan to Milk Supply Societies

*606. *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total amount of assistance sought for by the Registrar of Co-operative Societies for the grant of loans and subsidy for the purchase of milch animals to the Harijan Members of Milk Supply Societies for the years 1962–63 and 1963–64; and

(*b*) the amount of assistance actually allotted during these years?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : ஸார், பால் வழங்கும் சங்கத்தில் சேர்ந்து மாடுகளை வாங்குவதற்காக அரிஜனங்களுக்கு என்று, அந்த இலாகாவிலிருந்து 100 ரூபாய் மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த சலுகை இப்போது நடைமுறையில் இருக்கிறதா ?

கனம் திரு பூ. கக்கன் : பால் மாடுகள் வாங்குவதற்காக அரசாங்கம் மான்யமாகவும், கடனாகவும் பணம் கொடுத்து வருகிறது. அரிஜன நல இலாகாவிலிருந்து கூட்டுறவு மூலமாக உதவி செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : ஏற்கனவே கூட்டுறவு மூலமாக அரிஜன நல இலாகாவிலிருந்து 100 ரூபாய் மான்யமாக கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. அப்படி நிறுத்தியிருந்தால், இந்த உதவியை தொடர்ந்து கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பால் மாடுகள் வாங்குவதற்கு கூட்டுறவு வாயிலாக, அரிஜன நல இலாகாவிலிருந்து 125 ரூபாய் மான்யமாகவும் 125 ரூபாய் கடனாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. எந்த உதவியும் நிறுத்தப்படவில்லை.

---

a Printed as Appendix IV on pages 538–539 infra.